செ.வெ.எண்: 54 நாள்: 20.09.2021

**விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., அவர்கள் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு விழுப்புரம் மாவட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக மாபெரும் தூய்மைப்பணி முகாமினை தொடங்கி வைத்தார்.**

விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., அவர்கள் இன்று (20.09.2021) வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட கீழ்ப்பெரும்பாக்கம் **E.B**. காலனி, தாமரை குளம், கே.கே.ரோடு மற்றும் திருச்சி ரோடு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் வாய்க்கால் தூர்வாரும் பணியினை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ,ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது :-

வரவிருக்கின்ற வடகிழக்கு பருவமழையினால் நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு இடங்களில் வீடுகளுக்குள் வெள்ளநீர் புகும் வாய்ப்பு உள்ளதாலும், அதிகப்படியாக தேக்கமாகும் மழைநீரால் டெங்கு மற்றும் மலேரியா நோய் பரப்பும் கொசுக்கள் உற்பத்தியாகும் சூழ்நிலை உள்ளது. மேலும் மழைநீர் சாக்கடையுடன் கலந்து தேங்குவதால் இதர தொற்று நோய்கள் பரவும் அபாயமும் உள்ளது.

**தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி விழுப்புரம் மாவட்டத்திற்குட்பட்ட நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 20.09.2021 முதல் 25.09.2021 வரை நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறை சார்பாக மெகா கால்வாய் மற்றும் மழைநீர் வடிகால்கள் தூய்மைப்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.**

மழைநீர் வடிகால்கள் அனைத்தையும் பெரிய மழைநீர் வடிகால், நடுத்தர மழைநீர் வடிகால் மற்றும் சிறிய மழைநீர் வடிகால் என முதலில் வகைப்பாடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

பெரிய மழைநீர் வடிகால்களில் சேகரமாகியுள்ள வடிகால் படிவுகளை அகற்றுவதற்கு பொக்லைன், ஜெட் ராடிங் இயந்திரம், ஜே.சி.பி இயந்திரம் மற்றும் தேவைப்படும் இதர இயந்திரங்களை போதுமான அளவில் ஏற்பாடு செய்து பயன்படுத்த வேண்டும். மேற்படி இயந்திரங்கள் இல்லாத உள்ளாட்சிகளில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் குடியிருப்பு நல சங்கங்கள் மூலமாகவும் ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

மேலும், நடுத்தர மற்றும் சிறிய மழைநீர் வடிகால்களில் உள்ள படிவுகளை அகற்றுவதற்கு உள்ளாட்சிகளில் பணிபுரியம் அனைத்து தூய்மை பணியாளர்களையும் பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்க கையுறை, முகக்கவசம், காலுறை போன்ற பாதுகாப்பு உபரணங்களை பயன்படுத்தி மேற்கொள்ள வேண்டும். மேலும், கழிவுநீர் வாய்க்கால் மற்றும் பாதாள சாக்கடை போன்ற இடங்களில் பணிகள் மேற்கொள்ளும்பொழுது பாதாள சாக்கடை தொட்டியில் மூடப்பட்டுள்ள மூடிகளை திறந்த பின்னர் 10 நிமிடம் கழித்து பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், இப்பணிகளில் ஈடுபடும் பணியாளர்கள் விஷவாயு தாக்காதவாறு பாதுகாப்பு கவசத்துடனும், முன்னெச்சரிக்கையுடனும் பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட 7 வார்டுகளை கொண்டு 1 மண்டலம் வீதம் பிரித்து மொத்தம் 6 மண்டலங்களில் பணிகள் தூய்மைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும், பணிகள் மேற்கொள்ளப்படும் இடங்களில் சரிவர செயல்பாட்டில் இல்லாத குடிநீர், தெருவிளக்குகள், சாலைவசதி போன்ற அடிப்படை வசதிகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. விழுப்புரம் புதிய பேருந்து நிலையத்தில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்காதவாறு மழைநீர் வடிகால் வாய்க்காலினை சரிசெய்து மழைநீர் முழுவதுமாக வெளியேற தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வடிகால்களில் படிவுகளை அகற்றும் போது வடிகாலின் ஆரம்ப பகுதியில் தொடங்கி வடிகால் இறுதி பகுதி வரை எவ்வித விடுத்தலுமின்றி பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டும். வடிகால் படிவுகள் அகற்றும்பொழுது வடிகால்கள் மற்றும் தெருக்களில் சேகரமாகியுள்ள திடக்கழிவுகள் கட்டிட இடிபாடுகள் மற்றும் செடி, கொடி மற்றும் புதர்களை முழுமையாக அகற்றிட வேண்டும். பணி நடைபெறும் பகுதிகளில் உள்ள குறுகிய சந்துகளில் திடக்கழிவுகள் சேகரமாகி இருந்தால் உடன் அகற்றப்பட்டு கிருமி நாசினி தெளித்து மீண்டும் திடக்கழிவுகள் சேராமல் தொடர் கண்காணிப்பு செய்திட வேண்டும்

இத்திட்டத்தினை முழுமையாக 6 நாட்களுக்குள் செயல்படுத்தி முடித்திட தேவையான வாகனங்கள், பணியாளர்கள் மற்றும் மேற்பார்வை அலுவலர்கள் ஆகியோர்களை வார்டு மற்றும் நாள் வாரியாக பொறுப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இச்செயல் திட்ட காலத்தில் தவிர்க்க முடியாத காரணங்களை தவிர அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் விடுப்பில் செல்லாமல் பணியினை மேற்கொள்வார்கள்.

மழைநீர் வடிகால்கள் மீது ஆக்கிரமிப்புகள் இருப்பின் வருவாய்த்துறை, காவல்துறை, நில அளவைத்துறை, பொதுப்பணித்துறை (நீ.வ.ஆ), நெடுஞ்சாலைத்துறை ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து பணிக்கு முந்தைய தினமே சம்மந்தப்பட்ட ஆக்கிரமிப்புதாரர்களுக்கு தெரியப்படுத்தி ஆக்கிரமிப்புகளை அகற்றி தூய்மைப்படுத்தி மழைநீர் நீர்நிலைகளுக்கு தங்குதடையின்றி செல்வதற்கு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆலோசனைக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர் ந.ஸ்ரீநாதா.இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராஜசேகரன், நகராட்சி ஆணையர் திரு.போ.வி.சுரேந்திரஷா மற்றும் அனைத்துத்துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்துகொண்டார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.